# ‘நீட்’ விலக்கை வலியுறுத்தி மாபெரும் கையெழுத்து இயக்கம்!



அரியலூர் மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் “நீட் விலக்கு நம் இலக்கு” நீட் விலக்கை வலியுறுத்தும் மாபெரும் கையெழுத்து இயக்கம் சார்பில், செந்துறை ஒன்றியம், குழுமூர் கிராமத்தில், மருத்துவர் அனிதா திடலில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நடைபெற்ற முகாமில் கலந்து கொண்டு, கையெழுத்து இட்டு துவங்கி வைத்து, நீட் எதிர்ப்பு போராளி தங்கை அனிதா அவர்களின் நினைவு நூலகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், கழக கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் சஞ்சய் மற்றும் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்கழக செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மருத்துவரணி நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவரணி மற்றும் மருத்துவரணி சார்பில், ‘நீட்’ விலக்கு நம் இலக்கு 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., செ.இராமலிங்கம் எம்.பி., சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. மருத்துவர் யாழினி, சுப.தமிழாகன், ராஜா, பிரபு சீனிவாசன், வெங்கடேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற நம்முடைய கல்வி உரிமைக்கான கோரிக்கையை நிறைவேற்ற ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுக்க கையெழுத்து இயக்கத்தை கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி மூலம் துவக்கி வைத்தார். இதையடுத்து வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் தலைமைக் கழக செய்தி தொடர்பு குழு துணை செயலாளர் சையத் ஹபீஸ் சித்திக், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, கோமதி, மாவட்ட பொருளாளர் ஸ்ரீராம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டாக்டர் ஆ.பிரபு, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன், மாவட்ட அவைத்தலைவர் கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் முனைவர் வரத.ராஜசேகர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ரமேஷ் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் நீட் விலக்கு, நம் இலக்கு என்ற மக்கள் இயக்கத்தை கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் முன்னிலையில் தொடங்கி வைத்ததையடுத்து மயிலாடுதுறை மாவட்டத்தில் மாணவ, மாணவிகளிடம் மாவட்டக் கழகச் செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தொடங்கி வைத்தார்.

## கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில்

# பயன் பெறுவோரின் தரவுகள் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படும்!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, அக். 24-

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் பயன்பெறுவோரின் தரவுகள் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படும் என்றும் ஒவ்வொரு ஆண்டின் காலாண்டு மற்றும் அரையாண்டு காலங்களில் பரிசீலனை செய்யப்பட்டு, திட்டப் பயனாளிகளின் தகுதி உறுதிப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையின் படி, தற்போது, கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகள் உள்ளனர். ஒவ்வொரு ஆண்டின் காலாண்டு அரையாண்டு காலங்களில் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களது தகுதி உறுதிப்படுத்தப்படும். வருமான வரித் துறை, மின்சார வாரியம் உள்ளிட்ட பல்வேறு தரவுகளின் அடிப்படையில் சிறப்பு திட்ட அமலாக்கத் துறை இந்த பரிசீலனையை மேற்கொள்ளும்.

இறப்புப் பதிவு, ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை தரவுகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், வாரியங்களின் பணியாளர்கள் பற்றிய தரவுகள், சமூகப் பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியத் தரவுகள், அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரிய தரவுகள், வருமானச் சான்று தரவுகள், நான்கு சக்கர கனரக வாகனங்கள் பதிவு செய்யப்பட்ட தரவுகள் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படும்.

மேலும், பொது விநியோக திட்டம் தொடர்பான தரவுகள், சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தப்பட்ட விவரங்கள், நில உடமை தொடர்பான தகவல் தளங்கள் மூலம் காலாண்டு அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்படும். இதேபோல், தொழில் வரி செலுத்தப்பட்ட தரவுகள், மின்சாரப் பயன்பாட்டு தரவுகள் அரையாண்டு முறையில் சரிபார்க்கப்படும். மேலும், வருமான வரி செலுத்தப்பட்ட தாக்கல் செய்யப்பட்ட தரவுகள், சொத்து வரி குறித்த தரவுகள் ஆண்டு தோறும் சரிபார்க்கப்படும். இத்தகவல்கள் அடிப்படையில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட பயனாளிகளின் பட்டியல் புதுப்பிக்கப்படும் என்றும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தி.மு.க. இளைஞர் அணி,மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில்

# ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து முகாமினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவங்கி வைத்தார்!

அரியலூர், அக்.24

கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் சென்னையில் காணொளி காட்சி வாயிலாக, நடைபெற்ற கையெழுத்து முகாமின் தொடர்ச்சியாக அரியலூர் மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் “நீட் விலக்கு நம் இலக்கு” நீட் விலக்கை வலியுறுத்தும் மாபெரும் கையெழுத்து இயக்கம் செந்துறை ஒன்றியம், குழுமூர் கிராமத்தில், மருத்துவர் அனிதா திடலில் நடைபெற்ற முகாமில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு, கையெழுத்து முகாமை துவங்கி வைத்து, கையொப்பமிட்டு நீட் எதிர்ப்பு போராளி தங்கை அனிதா அவர்களின் நினைவு நூலகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி கண்டன உரையாற்றினார்.

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:-

ஒன்றிய அரசு கொண்டு வந்த நீட் தேர்வில் வெற்றி பெற்றால்தான் மருத்துவர் சீட் கிடைக்கும் என்ற சூழலை உருவாக்கிய ஒன்றிய அரசு 12 வகுப்பில் 99% கட் ஆப் மார்க் எடுத்த மாணவி அனிதாவுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டு இருக்கிறது.

உயர்சாதி வகுப்பினர் மட்டும் தான் மருத்துவம் படிக்கவேண்டும். கிராமப் புறத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் ஒடுக்கப் பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் மருத்துவம் மற்றும் எந்த படிப்பும் படித்து விடக் கூடாது என்ற நோக்கத்தோடு கொண்டுவரப் பட்டது தான் இந்த நீட் தேர்வு.

நீதிக்கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக தமிழகத்தில் மருத்துவராக ஒருவர் வரவேண்டும் என்றால் சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும்.

### திட்டமிட்டு சூழலை உருவாக்கியுள்ளார்கள்!

சமஸ்கிருதம் தெரிந்தால் தான் மருத்துவராக வரமுடியும் என்றால் பார்ப்பனர் மட்டும் தான் மருத்துவராக முடியும். எனவே திட்டமிட்டுதான் இதுபோன்ற சூழலை உருவாக்கி வைத்து இருந்தார்கள்.

பின்னர் நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்த உடன்தான் சமஸ்கிருதம் படித்தால் மருத்துவர் ஆக முடியும் என்று இருந்த நடைமுறை நீக்கப்பட்டது.

தமிழகத்தில் பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட, ஒடுக்கப்பட்ட, கிராமப்புற மாணவ, மாணவியர்கள் எல்லாம் மருத்துவர்,பொறியாளர் இன்னும் உயர்ந்த படிப்புகள் எல்லாம் படித்து சமுதாயத்தில் ஒரு உயர்ந்த இடத்திற்கு அனைவரும் வந்தார்கள் இதை எல்லாம் பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்றிய அரசு பழையபடி அதன் மறு வடிவமாகத்தான் இப் போது நீட் தேர்வை கொண்டுவந்துள்ளார்கள்.

நமது மாணவர்கள் பெரும்பாலோனோர் படிக்கும் பாடத்திட்டம் தமிழ்நாடு அரசின் மாநில பாடத்திட்டம். ஆனால் நீட் தேர்வுக்கான CBSE பாடத்திட்டம் ஒன்றிய அரசின் பாடத்திட்டம். அதில் படிக்கும் மாணவர்கள் இரண்டு ஆண்டுகள் படிப்பதால் நமது மாநில அரசின் பாடத்திட்டத்தில் படிக்கும் மாணவர்கள் இரண்டு மாதத்தில் எப்படி தேர்வாவார்கள்.

இந்த நீட் தேர்வுக்கு முன் மருத்துவராக தேர்வானவர்களில் 97 சதவீதம் பேர் மாநில பாடத்திட்டத்தில் படித்தவர்கள். 3 சதவீதம் தான் CBSE பாடத்திட்டத்தில் படித்தவர்கள் மருத்துவ படிப்புக்கு தேர்வானார்கள்.

ஆனால் இன்று 65 சதவீத மருத்துவ படிப்பிற்கான இடங்களை CBSE மாணவர்கள் கைப்பற்றி விட்டார்கள். மீதம் 35 சதவீதங்கள் இடம் தான் மாநில பாடத்திட்டத்தில் பெற்றிருக்கிறார்கள்.

ஒன்றிய பா.ஜ.க.வின் திட்டம் என்ன என்றால் நாம் பழைய மாதிரி நம் முன்னோர்கள் என்ன குலத் தொழில் செய்தார்கலோ அதையே திரும்பச் செய்ய வேண்டும். அவர்கள் மட்டுமே உயர்ந்த படிப்பு படித்து நம்மை அடிமை படுத்த வேண்டும் என நினைத்தது இதுபோன்ற வேலைகளை செய்து வருகிறார்கள். இதுவரை ஒன்றிய அரசு கொண்டு வந்த நீட் தேர்வால் தமிழகத்தில் 20 க்கும் மேற்பட்டோர் தற்கொலை செய்து கொண்டு உள்ளனர் இதுபோன்ற சூழல் இனி தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; வேறு எந்த மாநிலத்த்திற்கும் வரக் கூடாது. அதற்கு எதிர்வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் உள்ள 40 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி வெற்றி பெற்று ஒன்றிய பா.ஜ.க. அரசை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என பேசினார்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா தலைமை வகித்தார்.

முன்னதாக மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட அவைத்தலைவர் சிவ.மாணிக்கம், மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகர், லதாபாலு,

மு.கணேசன், மாவட்ட பொருளாளர் கு.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கள் சி.ஆர்.எம்.பொய்யாமொழி, ஆர்.எம். அன்பழகன், இரா.பாலு, வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைச்சர் சா.சி.சிவசங்கர், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், கழக கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச.அ. பெருநற்கிள்ளி, எம்.பி.பால சுப்ரமணியன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், ரெ.அசோகசக்ரவர்த்தி, கோ.அறிவழகன், மா.அன்பழகன், வா.செளந்தரராஜன், ரெங்க.முருகன், ஆர்.கலிய பெருமாள்,

வி.எழில்மாறன், நகர கழக செயலாளர்கள் இரா. முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் ப.கோபாலகிருஷ்ணன், அல்போன்ஸ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மரு.சஞ்சய், கே.சி.லூயி கதிரவன், எம்.ஜி.ராஜேந்திரன், பி.ஆர்.பாண்டியன், என்.ஆர்.ராமதுரை, அருண் ராஜா,தலைமை கழக பேச்சாளர் இளஞ்செழியன், அயலக அணி மாவட்ட தலைவர் இளஞ்செழியன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.முருகேசன், வீர. சிவா, ச.வசந்தபகலவன், சிவ.ரமேஷ், செல்வ.பிரபாகரன், ரமேஷ், மரு.சங்கர், மரு.உதயசூர்யா,சி.பாபு, சேவியர் சஞ்சீவிகுமார், அருண்,ஜெயகுமார் , இளம் பரிதி, கதிர், நகர நிர்வாகிகள் இராஜேந்திரன், ஞானபிரகாசம், முரசொலிகுமார், பிரபாகரன், கொளஞ்சியப்பா, முத்தமிழ், உத்திராபதி,பிரதீப் மகளிர் அணி பானுமதி, சித்ரா, ராணி, இலக்கியா, சுகன்யா, சரிதா, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞரணி, மாணவரணி, மருத்துவரணி நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அர. நடராசன்

**அக்டோபர் 24 (1987)**



**இளம்வயதிலேயே கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**கிளைச் செயலாளர், உப்பிலியாபுரம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**ஒன்றிய பெருந்தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**நெருக்கடி கால மிசாவில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**